அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 6

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 03.06.2023** | **பக்கங்கள்: 12** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. தமிழரது தனித்தன்மையான பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்று

   ☐ மானம் ☐ சோர்வு ☐ அச்சம்

2. க், ச், ட், த், ப், ற் ஆகிய மெய்யெழுத்துகள்

   ☐ இடையினம் ☐ மெல்லினம் ☐ வல்லினம்

3. இந்தியாவையும் ஈழத்தையும் பிரிப்பது

   ☐ பனாமாக் கால்வாய் ☐ பாக்கு நீரிணை ☐ ஆங்கிலக் கால்வாய்

4. தலைவன் என்பதன் எதிர்ப்பாற்சொல்

   ☐ தோழி ☐ தமிழிச்சி ☐ தலைவி

5. கடல் + அலை என்பதைச் சேர்த்து எழுதினால்

   ☐ கடல்அலை ☐ கடல்லலை ☐ கடலலை

6. ஈழத்தில் பெருங்கற்காலக் குடியிருப்பு நடுவங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களுள் ஒன்று

   ☐ கந்தரோடை ☐ வவுனியா ☐ திருகோணமலை

7. இறந்தகால இடைநிலைகள்

   ☐ ட், த், ற், இன், ன் ☐ ப், வ் ☐ கின்று, கிறு

8. பாவேந்தரது இயற்பெயர்

   ☐ மயில்வாகனன் ☐ கனகசுப்புரத்தினம் ☐ சுப்பிரமணியம்

9. பேசுதல் என்பது

   ☐ தொழிற்பெயர் ☐ சினைப்பெயர் ☐ குணப்பெயர்

10. நிலம், நீர், தீ, காற்று, வானம் என்பன

    ☐ ஐம்பொறி ☐ ஐம்பூதம் ☐ ஐம்புலன்

11. நாட்குறிப்பு என்பதைப் பிரித்து எழுதினால்

☐ நால் + குறிப்பு ☐ நாள் + குறிப்பு ☐ நா + குறிப்பு

12. எல்லாள மன்னனின் நினைவிடம் அமைந்துள்ள இடம்

☐ அநுராதபுரம் ☐ யாழ்ப்பாணம் ☐ மன்னார்

13. ஆழி என்பதன் ஒத்தபொருட் சொல்

☐ கடல் ☐ குளம் ☐ ஆறு

14. பூவின் வாடிய நிலையை குறிப்பது

☐ அரும்பு ☐ மலர் ☐ செம்மல்

15. இளமையிற் கல்வி சிலையில்

☐ வாசிப்பு ☐ எழுத்து ☐ பேச்சு

(15 x 1 = 15 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. மக்கள் எல்லாள மன்னனின் ஆட்சியைப் போற்றினர்.
2. அம்மா சமையலுக்குக் காய்கறிகளை வெட்டினார்.
3. செழியன் பனி காலத்தில் பனிப்பாவை செய்வான்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9 x 1 = 9 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொல்லை இடைவெளியில் வைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| தமிழ்மொழியில் | கதிரவனால் | தொன்மைக்குடிகள் |
| தோகையில் | பெரிய பெரிய | கவிதைகளை |

1. காட்டில் ______________________ மரங்களைப் பார்க்கலாம்.
2. கவிஞர் புதுவை இரத்தினதுரை உணர்வுமிக்க __________________ எழுதினார்.
3. நாம் எமது தாயக உறவுகளுடன் ______________________ பேசுவோம்.
4. தமிழர் ஈழத்தின் ______________________ என்பதற்கான சான்றுகள் உள்ளன.
5. ஆண் மயிலினது __________________ பல வண்ணங்கள் உள்ளன.
6. புவிக்குக் ____________________ ஒளி கிடைக்கிறது.

(6 X 1 = 6 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. Harbour | 1. Hafen | 1. Havn |
| 2. Spring | 2. Frühling | 2. Vår |
| 3. Books | 3. Bücher | 3. Bøker |
| 4. Food | 4. Nahrungsmittel | 4. Mat |
| 5. Relatives | 5. Verwandte | 5. Slektning |

**இத்தாலி:**

1. Porto
2. Primavera
3. Libri
4. Cibi
5. Parenti

**நெதர்லாந்து:**

1. Haven
2. Lente
3. Boeken
4. Voedsel
5. Familielid

**டென்மார்க்:**

1. Havn
2. Forår
3. Bøger
4. Mad
5. Slægtninge

**சுவீடன்:**

1. Hamn
2. Vår
3. Böcker
4. Mat
5. Släktingar

**பின்லாந்து:**

1. Satama
2. Syksy
3. Kirjat
4. Ruokaa
5. Sukulaiset

**தமிழ்:**

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

(5 X 1 = 5 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நாட்டார் பாடல் வகைகளுள் இரண்டு எழுதுக.

   ______________________________

2. நுண்கற்காலப் பண்பாட்டுக் கூறுகளுள் இரண்டு எழுதுக.

   ______________________________

   ______________________________

3. பாவேந்தரது கவிதைகள் எவற்றை வெளிப்படுத்துகின்றன?

   ______________________________

   ______________________________

4. தமிழர் தேசம் என அழைக்கப்படுவது எது?

   ______________________________

5. ஒலி அடிப்படையில் உயிரெழுத்துகளின் வகைகளை எழுதுக.

   ______________________________

   ______________________________

6. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   இடப்பெயர்: ______________ காலப்பெயர்: ______________

7. தொடர்ச்சொல்லியத்தைத் தனிச்சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

   மாணவர்கள் மலையில் ஏறி பனியில் சறுக்கினார்கள்.

   ______________________________

   ______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
நன்றாய்ப் படியுங்கள் நாட்டின் குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள்! உயர்வினை எண்ணுங்கள்!

குன்றினைப்போல் உடல் வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்வில் புதுமை காணவேண்டும்!

- பாரதிதாசன்

1. நாட்டினை ஆளப்பிறந்தவர்கள் யாவர்?

______________________________

2. எதனை எண்ண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது?

______________________________

3. எதைப் போல உடல் வன்மை வேண்டும்?

______________________________

4. கொடுமை தீர்க்க என்ன செய்யவேண்டும்?

______________________________

5. அன்றன்று வாழ்வில் எதைக் காணவேண்டும்?

______________________________

(5 X 1 = 5 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. ஆழிக்குமரன் ஆனந்தன்
2. ஈகம்
3. கோடைகாலம்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- பருவகாலங்கள்
- கோடைகால இயற்கைக் காட்சிகள்
- கோடைகாலப் பொழுதுபோக்குகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

தமிழர் தாயகப் பகுதிகளுள் ஒன்று யாழ்ப்பாணம். வேலணை, காரைநகர், நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளும் இதனுள் அடங்கும். இது இயற்கை அழகும் வளங்களும் நிறைந்த நிலம். வீரமும் நாட்டுப்பற்றும் நிறைந்த சங்கிலிய மன்னன் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களுள் ஒருவர். யாழ்ப்பாண மக்களின் தொழில்களாக நெல் வேளாண்மை, மீன்பிடித்தல், காய்கறி மற்றும் பழ உற்பத்தி, வணிகம் போன்றவற்றைக் கூறலாம். யாழ்ப்பாணத்தில் பனைமரங்கள் நிறைந்துள்ளன. அதனால், பனையிலிருந்து செய்யப்படும் பாய், பெட்டி, சுளகு போன்ற பொருள்களும் இங்கு பெருமளவில் கிடைக்கின்றன. தமிழரின் கல்விக் களஞ்சியமான யாழ்ப்பாணப் பொது நூலகம் இங்குதான் உள்ளது.

1. யாழ்ப்பாணத்துள் அடங்கும் தீவுகள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களுள் ஒருவர் யார்?

_______________________________________________

_______________________________________________

3. யாழ்ப்பாண மக்களின் தொழில்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

4. பனையிலிருந்து செய்யப்படும் பொருள்கள் எவை?

_______________________________________________

_______________________________________________

5. தமிழரின் கல்விக் களஞ்சியமாக விளங்குவது எது?

_______________________________________________

_______________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

2. **தரப்பட்டுள்ள குறிப்புகளை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

பாடல்கள் மூலம் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டினார்.



இந்தியாவில் பிரித்தானியரது மேலாண்மைக்கு எதிராகப் போராடினார்.

**மகாகவி பாரதியார்**
பிறப்பு: 11.12.1882
இறப்பு: 11.09.1921

தாய்மொழி மீதும் தாய்நாட்டின் மீதும் பற்றுக்கொண்ட கவிஞர்.

பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்தார்.

1. பாரதியார் தாய்மொழி மீது பற்றுக் கொண்ட கவிஞர். (      )
2. அவர் 11.09.1921இல் பிறந்தார். (      )
3. போர்த்துக்கேயரின் மேலாண்மைக்கு எதிராகப் போராடினார். (      )
4. பாடல்கள் மூலம் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டினார். (      )
5. மகாகவி பாரதியார் பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்தார். (      )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 09 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |